## ஜாலான் மஸ்ஜிட் இந்தியா தேவி ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலய சர்ச்சை

# மார்ச் 27 இல் ஆலயம் உடைபடாது

## அடிக்கல் நாட்டு விழா நடைபெறும்



(எஸ்.ஜீவராஜா - ஆர்.குணா)

*கோலாலம்பூர், மார்ச் 21-*

*சர்ச்சைக்குரிய, மாநகரின் சுமார் 150 ஆண்டுகள் பழைமை வாய்ந்த, ஜாலான் மஸ்ஜிட் இந்தியா தேவி ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயம் இப்போதைக்கு அகற்றப்படாது. ஆனால் அங்கு மடானி பள்ளிவாசலை நிர்மாணிக்கும் ஜெக்கல் எனும் தனியார் நிறுவன திட்டத்தின் முதல் கட்டமாக வரும் 27 ஆம் தேதி (மார்ச்) பிரதமரின் தலைமையில் அடிக்கல் நாட்டு விழா நடைபெறும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை நிலவி வந்துள்ள தகவல்களின் அடிப்படையில், மார்ச் 27 இல் ஆலயம் உடைபடாது. மாற்று நிலம் பெற்றுத்தருவதில் மாநகர் மன்றம் பின்வாங்காது என கோலாலம்பூர் மேயர் உறுதியளித்துள்ளார்.*

(மேலும் செய்திகள் விரிவாக பக்கம் 16)



## ஆலயம் உடைபடாது - கோலாலம்பூர் மேயர் உறுதி மொழி



கோலாலம்பூர், மார்ச் 21-

நூற்றாண்டு காலம் பழைமை வாய்ந்த தேவி ஸ்ரீ பத்ர காளியம்மன் ஆலயம் உடைக்கப்பட மாட்டாது என்று கோலாலம்பூர் மாநகர மன்றம் உறுதிமொழி வழங்கியிருக்கிறது. அந்த ஆலயத்தின் நிர்வாகம் மற்றும் இந்து பக்தர்களின் கோரிக்கைகள் முழுமையாக பரிசீலனை செய்யப்படும் என்றும் அது தெரிவித்தது.

சுமுகமான தீர்வு காணப்படும் வரை ஜாலான் மஸ்ஜித் இந்தியாவில் வீற்றிருக்கும் தேவி ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயம் உடைக்கப்படாது என கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் தலைவர் மேயர் டத்தோஸ்ரீ மைமுனா உறுதி கூறினார்.

நேற்று காலை 9 மணியளவில் ஜாலான் மஸ்ஜித் இந்தியா தேவி ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயத்திற்கு வருகை புரிந்த அவர் இதனை தெரிவித்தார்.

இந்த ஆலயம் அமைந்துள்ள நிலம் தனியார் நிறுவனத்திற்கு சொந்தமாகும். இங்கு பள்ளிவாசல் கட்டுவதற்கும் அந் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. ஆனால் சம்பந்தப்பட்ட ஆலயம் பல ஆண்டு களாக இங்கு உள்ளது. இங்கு பக்தர்களும் வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆகையால் இந்த விவகாரத்தில் உடனடியாக எந்த ஒரு முடிவும் எடுக்க முடியாது. குறிப்பாக ஆலயத்தின் மீதும் நாம் கை வைக்க முடியாது. அதன் அடிப்படையில் இந்த ஆலயத்திற்கு மாற்று நிலம் வழங்குவது குறித்தும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகிறது.

ஆலய நிர்வாகம் இதே நிலம் வேண்டும் என கோரிக்கையை முன் வைத்துள்ளது. ஆகவே இந்த விவகாரத்தில் அனைத்து தரப்பினரையும் அழைத்து பேசி ஒரு சுமுகமான முடிவு எடுக்கப்பட வேண்டும். அதுவரை ஆலயம் உடைக்கப்படாது. ஆலயத்தில் பக்தர்கள் வழக்கம்போல் வழிபாடுகளை மேற்கொள்ளலாம். இதற்கு எந்த ஒரு தடையும் விதிக்கப்படாது என்று அவர் கூறினார்.








### தேவி ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயம் அகற்றப்படுவதை

# அனுமதிக்க முடியாது

## ஆலய நிர்வாகம் திட்டவட்டம்



(எஸ்.ஜீவராஜா - ஆர்.குணா)

கோலாலம்பூர், மார்ச் 21-

எந்த காரணத்தை முன்னிட்டும் தேவி ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயம் அகற்றப்படுவதை நாங்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

தற்போது இருக்கும் அதே இடத்தில் தான் அந்த ஆலயம் நிரந்தரமாக இருக்கும். இதில் எந்த மாற்றமும் இருக்காது. ஏதாவது மாற்றம் வந்தால் அதை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று ஆலய நிர்வாகத்தினர் திட்டவட்டமாக தெரிவித்தனர். ஆலயம் வீற்றிருக்கும் இடம் விற்கப்பட்டு விட்டது என்று இப்போது கூறுகிறார்கள். ஒரு வேளை அந்த நிலத்தை விற்பது தெரிய வந்திருந்தால் அதை நாங்களே வாங்கியிருப்போம் என்று ஆலயத்தின் தலைவர் டாக்டர் பார்த்திபன் தெரிவித்தார்.

கோலாலம்பூர் மாநகரில் பரபரப்பு மிகுந்த மஸ்ஜிட் இந்தியா பகுதியில் 132 ஆண்டுகளுக்கு முன்னர் அந்த ஆலயம் நிர்மாணிக்கப்பட்டது. தற்போது ஜெக்கல் மால் பேரங்காடி அருகே உயரமான வர்த்தக கட்டடங்கள் நடுவே அந்த ஆலயம் இருக்கிறது. அந்த ஆலயம் வீற்றிருக்கும் இடத்தை ஜெக்கல் மால் நிறுவனம் வாங்கி விட்டதாகவும் அந்த இடத்தில் புதிதாக ஒரு பள்ளி வாசல் கட்டப்படும் என்றும் செய்திகளில் வெளியாகியிருக்கின்றன.

இது இந்து பக்தர்கள் மத்தியில் அதிர்ச்சியையும் வேதனையையும் அளித்திருக்கிறது. வரும் மார்ச் 27 ஆம் தேதி அந்த இடத்தில் பள்ளி வாசல் நிர்மாணிப்பு திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெறும் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில் ஆலயத்தின் நிர்வாகிகளும் நூற்றுக்கணக்கான பக்தர்களும் திரண்டு தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர்.

மஸ்ஜிட் இந்தியா பகுதியில் வீற்றிருக்கும் ஒரே இந்து ஆலயம் இது மட்டுமே. நாள் தோறும் ஏராளமான பக்தர்கள் இங்கு வந்து செல்கின்றனர் என்று ஆலயத்தின் தலைவர் பார்த்திபன் கூறினார். இந்த இடத்தை விட்டு ஆலயம் அகற்றப்படுவதை அனுமதிக்க முடியாது. ஆலயம் அதே இடத்தில் தான் இருக்கும். இதில் நாங்கள் மிகவும் உறுதியாக இருக்கிறோம். நிலம் விற்கப்பட்டு விட்டது என்று கூறுகின்றனர்.

ஆனால் அது பற்றி எங்களுக்கு எதுவுமே தெரியாது. ஒரு வேளை நிலம் விற்கப்படுவது தெரிய வந்திருந்தால் நாங்களே அதை வாங்கியிருப்போம். இங்குள்ள இந்து பக்தர்களிடம் நிதி திரட்டி நிலத்தை வாங்கியிருப்போம். ஆனால் இப்போது மாற்று நிலத்திற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்றே கூறுகின்றனர்.

எங்களிடம் ஆவணங்களை வழங்கி விட்டனர் என்கின்றனர். இது எல்லாம் வெறும் வதந்தி. பொய்யான தகவல். மாற்று இடம் வழங்குவதாக உறுதி மொழி கூறியிருக்கிறோம் என்றும் இது தொடர்பாக கடிதம் வழங்கப்பட்டிருக்கிறது என்றும் கூறுகின்றனர். ஆனால் எந்த ஆதாரமும் கிடையாது. நாட்டில் எத்தனையோ கோவில்களும் பள்ளி வாசல்களும் அருகருகே இருக்கின்றன நிலையில் இங்கு மட்டும் எதற்காக இந்து ஆலயத்தை அகற்ற வேண்டும் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.



